உ




**தமிழ் சைவபிள்ளை, முதலியார், வன் னியர், யாதவாள், சீர்கருணீகர், செட்டியார், நாடார், தேவர், கவுண்டர், வேளாளர், உடையார், பர்வதகுலம்.**

# திருமணம்

## முன்தயாரிப்பு கையேடு



*கருத்தாக்கம் – வடிவம்*


**பாலு. சரவணசர்மா**

புரோகிதர் - ஜோதிடர் - பஞ்சாங்க கணணம்

**எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம் மேற்கு, சென்னை 45**

**Email: prohithar@gmail.com Cell: 98403 69677**

☎ புரோகிதர் தொடர்பு நேரம் – மதியம் 1 மணிக்கு மேல்


இந்த புத்தகத்தை மணமக்கள் வீட்டில் உள்ள அனைவரும் முழுமையாக படித்து அறியவும்

## தமிழ்நாடு திருமண முறை

✱ மணமகன் (4 முழம் வேஷ்டி கட்டிக்கொண்டு) பெற்றோருடன் மணமேடையில் அமர்ந்து
- பிள்ளையார் பூஜை
- அரசாணைக்கால் நடுதல்
- மணமகனுக்கு முகூர்த்த துணி தருதல்
- பெண் வீட்டார் மணமகனின் பெற்றோருக்கு பாதபூஜை துணி தருதல்

✱ மணமகள் பெற்றோருடன் மணமேடையில் அமர்ந்து
- பிள்ளையார் பூஜை, லட்சுமி பூஜை
- பிள்ளை வீட்டார் மணப்பெண்னின் பெற்றோருக்கு பாதபூஜை துணி தருதல்
- மணமகளுக்கு முகூர்த்த துணி அளித்தல்

✱ மணமகன் முகூர்த்ததுணி உடுத்தி மணவறை வந்தவுடன்
- நவக்கிரக பூஜை
- காசியாத்திரை புறப்படுதல்

✱ காசியாத்திரை
- மணமகள் தந்தை அல்லது மைத்துனர் பாதபூஜை செய்தல்
- ஆலம் எடுத்து மணவறைக்கு அழைத்தல்

✱ மணமேடையில் குலதெய்வம் படையல் பூஜை (5 இலை படையல்)
- காப்பு கட்டுதல்
- பெற்றோர்களுக்கு பாத பூஜை
- அக்னி சாட்சியாக கன் னிகையை தாரை வார்த்தல்

✱ மணமக்கள் பின் னால் நாத்தனார் விளக்கு ஏந்த
- திருமாங்கல்ய தாரணம்
- மாலை மாற்றல், முந்தானை முடிச்சு
- மணவரை வலம் வருதல்
- லாஜ ஹோமம்

5 குழந்தைகள் முளைபாலிகைகளை ஏந்தி முன் னால் செல்ல, அடுத்து நாத்தனார் விளக்கு ஏந்தி செல்ல மணமக்கள் பின் தொடர
- அக்னி வலம் வருதல்
- அம்மி மிதித்து மெட்டி போடுதல் அருந்ததி பார்த்தல்
- மைத்துனர் பொரி இடுதல்

✱ பெரியவர்கள் சேஷை அரிசி இடுதல்

✱ கங்கணம் அவிழ்த்தல் (காப்பு களைதல்)
- பானையில் மோதிரம் இடல்
- மங்கள ஆரத்தி

மேற்குறிப்பபிட்ட சம்பிரதாயங்கள் பொதுவானவை சிலருக்கு சம்பிரதாயங்களில் கூடுதலாகவோ, குறைவாகவோ அல்லது முன் பின் மாறுதல் அடைந்து இருக்கும்.

### ▣ முகூர்த்த பானைகள்

முகூர்த்த பானைகள்,
மணப் பொங்கல் பானை,
அகல்

### ▣ அரசாணைக்கால்

(மண்டபத்தில் ஏற்கனவே பூஜைக்கு பயன்படுத்திய மூங்கில் கொம்புகளை பயன்படுத்தக்கூடாது)

**இளம் மூங்கில் (5 அடி) –1**
அரசன் கிளை (5 அடி) –1
ஆலம் கிளை (5 அடி) –1
மாஇலை கொத்து

### ▣ பூ வகையறா

முகூர்த்த மாலைகள், பூச்சரம் 20முழம்
உதிரிப்பூக்கள், அருகன் புல்

### ▣ சில்லரை காசுகள்

ஒரு ருபாய் காசு 21
100 ரூபாய் 5

### ▣ அன்பளிப்பு எழுத

அன்பளிப்பு கவர் (100 எண்ணிக்கை)
40 பக்கம் நோட்டு, பேனா, ரப்பர் பேன்ட்

### ▣ இதரப்பொருட்கள்

மட்டை உரித்த தேங்காய் 3
மட்டை தேங்காய் 5
முகூர்த்த தேங்காய் 1
தரமான பச்சரிசி 7 Kg
தரமான சேஷை அரிசி 10 Kg
நல்லெண்ணெய் 2kg Can
வாழைப்பழம் 24
வாழை இலை 11
**புதிய பித்தளை கிண்ணம் 100 மிலி 1**

### ▣ வீட்டில் இருந்து

நவதான்ய முளைப்பாலி
**பித்தளை கலச சொம்பு**
சந்தன கிண்ணம், குங்குமசிமிழ்
பன்னீர் செம்பு
பூஜை பித்தளை சாமான்கள்
மணப்பாய் / மணை மேல் துணி
**கத்திரிக்கோல், ப்ளேடு**

♣ கையாள பழைய துணி
♣ பழைய செய்தித்தாள், கோணி

---

**முந்திய நாள் மாலையில் பட்டியலையும் வாங்கிய பொருட்களையும் ஒப்பிட்டு சரிபார்க்கவும்**

---

**சபையில் எப்படி**

- **வணக்கம்**
- **விழுந்து வணங்கல்**
- **தலை வணங்கல்**
- **அமருதல்**

**குறித்து மணமக்களுக்கு கற்பித்தல் நன்று.**

**ஆதரவற்றோர் இல்லங்கள்**

| | |
|---|---|
| குட்லைப் சென்டர் | 2226 4151, 4152 |
| சரணாலயம் | 944 4494 657 , 2276 2756 |
| பவுஷ்யதீபம் | 2276 1889, 94440 00889 |
| அக்ஷயா முதியோர் இல்லம் | 2276 1658 |
| ஆதீஸ்வரர் | 94444 85491, 2276 0020 |

## || திருமண பொருள் பட்டியல் ||

(இதை நகல் எடுக்கவும்)

### ▣ பூஜைப்பொருட்கள்

தரமான மஞ்சள் தூள் 200gm
தரமான குங்குமம் 50gm
மஞ்சள்கொம்பு 100gm
குண்டு மஞ்சள் 100gm
விபூதி சிறிய பொட்டலம் 1
நாம சூர்னம்
பன்னீர் புட்டி 100ml
சந்தனம் 10gm
நவரத்தின பொட்டலம்
நவதான்யம் 50gm
கற்பூரம் 100gm
ஊதுபத்தி 1Pkt
ஓமப்பொரி 1Pkt
ஓமத்திரவியம் Spl
உமி பாக்கெட் 1
மெழுகுவத்தி 2
திரிநூல் 3 கட்டு
நூல்கண்டு 2
நல்லெண்ணைய் 100gm
பூநூல் 6
வெற்றிலை 50
பாக்கு 50gm
சுன்னாம்பு சிறியது
தீப்பெட்டி 4
வெல்லம் 50gm
டைமன்ட் கற்கண்டு 100gm
பேரிச்சம் பழம் 200gm
கொட்டைப்பாக்கு 9
பாக்கு தொன்னை 1 டஜன்
சிறிய கத்தி 2
அரசன் சுள்ளி 3 கட்டு
தர்பை புல்
நலுங்குப்பொடி
RKG நெய் 100 கிராம் 2
தையிலை 2
கை விசிறி 1
திருமாங்கல்ய நூல் 1
துணி சோப் 1
பச்சரிசி மாவு 500gm
டிஷ்யூ பேப்பர் 1Pkt

### ▣ பஞ்சகவ்யம்

பசும் பால் 100 மிலி, தயிர் 100 மிலி

### ▣ ஆபரணங்கள்

திருமாங்கல்யம்
சுத்து, மெட்டி, பொரி மோதிரம்

### ▣ துணி வகையறா

சம்மந்தி துணி (பாத பூஜை)
மணமக்கள் முகூர்த்த துணிகள்
தலைப்பாகை துணி
சிவப்பு கைக்குட்டை 2
பெரிய காசி துண்டு 3
சிவப்பு ரவிக்கை துணி 2
சிறிய டர்கி டவல் 2
அய்யர் கதர் வேஷ்டி, சட்டைதுணி

### ▣ காசியாத்திரை

- **பகவத்கீதை புஸ்தகம்,**
- புதிய குடை, விசிறி,
- பித்தளை தட்டு, பாதணி
- பித்தளைச்சொம்பு
- பஞ்சபாத்திரம் உத்திரனி,

### ▣ மஞ்சள் அரைத்தல்

முன்னாள் மாலையில் ஒரு பெண்மணி கிழங்கு மஞ்சளை அம்மியில் அரைத்து மஞ்சள் பிள்ளையார் பிடித்தல் நன்று.

# தமிழர் திருமண முன்தயாரிப்பு

**( இரு வீட்டாரும் படித்து அறியவும் )**

## *மிக முக்கிய சடங்குகள்:*

இந்து திருமணத்தில் பாதபூஜை, சேஷை, காசி யாத்திரை, கங்கணம், கன்னிகாதானம், தாலிகட்டுதல், சீரகம்–வெல்லம், அக்னி வலம் வருதல், அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல், மெட்டி, பொரி இடுதல் ஆகியன மட்டுமே சாஸ்திரப்படியானது

விளையாட்டுகள், ஊஞ்சல், பொம்மை தாலாட்டு, மோதிரம் போடுதல் ஆகியன சம்பிரதாயப்படியானது **இது கட்டாயம் அல்ல. நல்ல நேரம் இருப்பின் மட்டும் செய்யப்படும்.**

◆ ***மருவிலக்கம் நடத்துவது தங்களை சார்ந்தது. தயவுசெய்து புரோகிதரை எதிர்பார்க்க வேண்டாம்***

## *பூக்கள் - அருகன்புல் - மாலை (துலுக்க சாமந்தியை தவிர்க்கவும்)*

புரோகிதரின் தேவைக்கு கதம்பம் 20 முழம் தேவை. **உதிரிப்பூக்கள் (பூஜை மற்றும் அட்சதையில் சேர்க்க).** அருகன் புல்: நலுங்கு, பிள்ளையார் பூஜைக்கு தேவை

- ✱ முகூர்த்த மாலை 2
- ✱ மாற்று மாலை 2
- ✱ கை செண்டு 2
- ✱ மல்லி / கதம்பம் சரம் 1 சென்டு
- ✱ சம்பந்தி பாத பூஜை மாலை 4(தேவைப்படின்)
- ✱ ஜடை 1
- ✱ உதரி ரோஜாப்பூ

## *வரவேற்பு*

வரவேற்பு இடத்தில் விளையாட்டுத்தனமான சிறுவர்களை அமர்த்த வேண்டாம் ஏனெனில் வரவேற்பு மிகவும் கௌரவமானது, மரியாதைக்குரியது. நிகழ்ச்சி முடியும் வரையில் வருபவர்களை முகமலர்ச்சியுடன் வணக்கம் செலுத்தி வரவேற்கவும்

விருந்தினர் விடைபெறும் பொழுது வணக்கம் கூறி தாம்பூலப்பை தந்து வழியனுப்பவும் – திருமண விருந்தோம்பலில் வரவேற்பு மிகவும் முக்கியமானது

பன்னீர் தெளிக்கும் இயந்திரம், கைகூப்பி வணக்கம் செலுத்தும் பொம்மை இயந்திரங்களுக்கு மரியாதை தெரியாது –அவை மனிதர்கள் அல்ல

***அன்பான வரவேற்புக்கு பெரியவர்களை வாசலில் நியமிக்கவும்***

## *சபையில் மரியாதை*

❖ வணக்கம் ❖ விழுந்து வணங்கல் ❖தலை வணங்கல் ❖ அமருதல்

முறைகள் குறித்து மணமக்களுக்கு கற்பித்தல் நன்று.

## *சம்மந்தி துணி (ஒரு சிலர்)*

சம்மந்திக்கு பாத பூஜை புடவை, வேஷ்டி துணியை முன்கூட்டி தந்து கட்டி கொள்ளச்சொல்லவும். வேறு ஏற்பாடு இருப்பின் புரோகிதர் வசம் முன்கூட்டியே சொல்லவும்.

## *பழைய துணி*

பூஜை செய்யும் இடத்தில் தரையில் சிந்தும் எண்ணெய், தண்ணீர் ஆகியவை சுத்தம் செய்ய பழைய துணி , பழைய செய்தித்தாள்கள் தேவை. வீட்டில் இருந்து கொண்டுவரவும்

## *பூஜை பாத்திரங்கள்*

கலச சொம்பு, மணி தட்டு, பஞ்ச பாத்திரம், அம்மி குழவி, கல்யாண மணை, புரேகிதர் மணை ஆகியவற்றை மண்டப நிர்வாகியிடம் முந்திய நாளே கேட்டு பெறவும். தேவைப்படின் வீட்டில் இருந்து கொண்டு வரவும்.

## *மஞ்சள் பூசி குங்குமம் இடல், மணவறை கோலம¢இடல¢*

<u>முன்னாள் மாலையில்</u> அம்மி குழவி, முக்காலி, குத்துவிளக்கு, காமாட்சி தீபம், கல்யாணமணை ஆகியவற்றை மஞ்சள் பூசி குங்குமம் இடவும். நலுங்கு வைக்கும் முன் அதிகாலையில் மணவறை மற்றும் மண்டப வாசலை சுத்தம் செய்து கோலம் இடவும்.

இதற்கு தேவைப்படும் கோலமாவு, வண்ணக்கோலப்பொடி, மஞ்சள்தூள், குங்குமம் ஆகியவற்றை வீட்டில் இருந்து கொண்டு வரவும்.

**மண்டப பணியாளர்களை எதிர்பார்க்காமல் நீங்களே இதை செய்யவும்.**

> **கைத்தறி கதர் துணிகளை வாங்கி ஏழை நெசவாளியின் ஒருவேளை உணவிற்கு வழி செய்து கிராம பொருளாதாரத்தை உயர்த்துவோம்** – *மகாத்மா காந்தி*

## *மண்டபத்தில் இசை*

தேவாரம், திவ்யபிரபந்தம், பக்தி இசையை ஒலிக்க செய்யவும், திரை இசை தவிர்க்கவும்.

## *புரோகிதர் தொடர்பு நேரம்*

**காலையில் பூஜையில் இருக்கும் பொழுது தொலைபேசி அழைப்புகளுக்கு உடன் பதில் அளிக்க இயலாது எனவே தயவுசெய்து மதியம் 1 மணிக்கு மேல் அழைக்கவும்**

## *திருமண நாள், இடம் விபரம்*

*தேதி:* *கிழமை :* *நேரம்:*

*மண்டபம்*

---

***புரோகிதர் தட்சனை : 11,000 ரூபாய்***

## ✂ முகூர்த்த பானைகள்

தங்களின் சம்பிரதாயப்படி, தகுந்த அளவு, எண்ணிக்கையில் வாங்கவும் இது தொடர்பாக இரு வீட்டாரும் பேசி முடிவு செய்து பட்டியலிடவும். எச்சில் துப்பிய, அழுக்கு படிந்த மணலை தவிர்க்கவும்

- மணல் 2 பக்கெட் ( பானை நிறுத்த )

## ✂ மணமேடை புனிதம¢

மணமேடை புனிதமான கோயில் போன்றது, பாதணியுடன் நுழைவதை தவிர்க்கவும், மற்றவர்களுக்கு அறிவுறுத்தவும்

## ✂ காமாட்சி விளக்கு வலம் வருதல்

திருமண சடங்கில் முக்கியமான மாங்கல்யம் முடிச்சு போடும் பொழுது மணப்பெண்ணின் பின்னால் விளக்கு ஏற்றுபவரை முன்கூட்டி தீர்மானிக்கவும்.

தோழிப்பெண், தோழமாப்பிள்ளை இருவரும் மணவறையில் திருமண தம்பதி அருகில் **திருமண சடங்குகள் முடியும் வரையில் இருக்க வலியுறுத்தவும்.**

## ✂ குல தெய்வம், கோத்திரம், மூதாதையர் பெயர், நட்சத்திரம்

- மணமக்களின் தந்தை, பாட்டனார், முப்பாட்டனார் பெயர் அறியவும்
- குல தெய்வம், கோத்திரம், மணப்பெண், மாப்பிள்ளை நட்சத்திரம், ராசி அறியவும்.

## ✂ சம்பிரதாயம்

திருமணத்திற்கான சம்பிரதாயங்கள் கடைபிடிக்கப்பட்டாலும் சிலருக்கு கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். இது தொடர்பாக 1 மணி நேரம் முன்னதாக புரோகிதரிடம் தெரிவித்தால் நல்லது.

## ✂ நலுங்கு (அதிகாலையில் வைக்கப்படும் நலுங்கு)

திருமணத்திற்கு 2 மணி நேரம் முன்னதாக தலைக்கு எண்ணெய் நலுங்கு வைக்க வேண்டும், எண்ணெய் நலுங்கு வைத்தவர்கள் கைதுடைக்க பழையதுணி அல்லது டிஷ்யூ பேப்பர்

### ✻ ✻ ✻ நேரம் தவறாமை ✻ ✻ ✻

திருமண சடங்குகள் முடியும் வரை மணமேடையில் புகைப்படம் எடுப்பதையும், மணமக்களின் இணைந்த கைகளை பிரிக்கும் வகையில் கை குலுக்குவதையும் தவிர்க்கவும்.

முகூர்த்த நேரத்திலேயே சம்பிரதாயங்களை முழுமையாக நிறைவு செய்ய புரோகிதருக்கு ஒத்துழைப்பு தரவும்.

## ✂ முளைப்பாலிகை (வழக்கம் இருப்பின்)

திருமணத்திற்கு 3 நாட்கள் முன் 100 கிராம் நவதான்யம் வாங்கி ஊற வைத்து பின்னர் ஈரத் துணியில் கட்டி வைக்கவும்.

## ✂ மெட்டி, பட்டம், வெள்ளி பூனூல்

மெட்டியினை மணப்பெண்ணின் கால் விரலின் அளவுப்படி அதிக கவனம் செலுத்தி வாங்கவும் ( கனமாக இருப்பின் பெரிது படுத்த முடியாது )

பட்டம், பூனூல் பழக்கம் உடையவர்கள் திருமணத்தின் பொழுது புரோகிதர் வசம் கூறி உரிய நேரத்தில் பட்டம் கட்டி, வெள்ளி பூனூல் சாற்றவும்.

## ✂ தீபம் ஒளிர்விடல்

திருமனம் முடியும் வரை மங்களகரமாக தீபம் ஒளிர் விட வேண்டும். ஒரு சுமங்கலி அல்லது வண்ணார் தேவை, நல்லெண்ணெய் 2 கிலோ தேவைப்படும்.

**எந்த நிலையிலும் சடங்குகள் முடியும் வரை தீபம் அணையாமல் பாதுகாக்கவும்.**

## ✂ தேவையான சில்லரை காசுகள்

◆ ஒரு ரூபாய் காசு: 21 ◆ 100 ரூபாய்: 5 எண்ணிக்கை

பூஜை துவங்கும் முன்னர் புரோகிதர் வசம் தரவும்

## ✂ உடை - ஒப்பனை

முகூர்த்த நேரத்தில் ஒப்பனைக்கு அதிக நேரம் எடுத்தால் பூஜைகள் தாமதமாகும் எனவே மணமகளுக்கு துரிதமாக ஒப்பனை செய்து ஒத்துழைக்கவும்

மணமக்கள் மேடைக்கு வரும் பொழுது முன்நாள் மாலையை கழுத்தில் சாற்றி வரவும்.

**மணமகன் வேஷ்டி உடுத்தி வரவும், கருப்பு பேண்ட் தவிர்க்கவும், மணமகள் சுடிதார் தவிர்க்கவும்.**

## ✂ கை விசிறி / கத்திரிக்கோல் / பிளேடு,

பொருட்களை பிரிக்கவும், பூச்சரத்தை கத்திரிக்கவும் தேவை

மணமேடையில் புழுக்கம் ஏற்படும், கைவிசிறி மணமக்களுக்கு தேவை

## ✂ முக்கியமானவர்கள்

மிகவும் நெருங்கிய உறவினர்கள் மண்டபத்திலேயே இரவு தங்குவது நல்லது

### ✻ திருமண பதிவு - புரோகிதர் சான்று ✻

✱ திருமணம் முடிந்த பிறகு புரோகிதர் சான்று, புரோகிதர் புகைப்படம், புரோகிதர் இருப்பிட சான்று ஆகியன மண்டபத்திலேயே தரப்படும்.

✱ திருமணப்பதிவு படிவத்தில் புரோகிதர் கையொப்பம் இடவேண்டும் எனவே பதிவு படிவத்தை முன்னதாக பூர்த்தி செய்து திருமண மண்டபத்திற்கு கட்டாயம் கொண்டுவரவும்.

✱ படிவத்தை புரோகிதரின் இல்லத்தில் நேரில் சந்தித்தும் கையொப்பம் பெறலாம். காலை மற்றும் முகூர்த்த நாட்களில் புரோகிதர் பதிவு அலுவலகத்திற்கு நேரில் வரயியலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

✱ திருமண மண்டபத்திற்கே பதிவாளர் வருகைத்தர ஏற்பாடு செய்யலாம்.

✱ மண்டபம் எந்த பதிவு அலுவலகத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்டது என்பதை முன்னதாக அறியவும். அதிகார எல்லைக்கு வெளியில் பதிவு செய்ய இயலாது.

***இந்து திருமண சட்டம் (திருத்தங்கள் உட்பட) ஆங்கில மொழியில் படிக்க எனது இணையதளம்*** www.prohithar.com ***பார்வையிடவும்.***

---



## திறன் மேலாண்மை

**திருமண சடங்கில் முகூர்த்த லக்னம் மிகமுக்கியமானது. லக்கினம் முடிவதற்குள் காப்பு(கங்கணம்) களையவேண்டும்.**

**நிகழ்ச்சியை திறம்பட, தரமுடன் நடத்திட ஒப்பனையாளர், புகைப்பட கலைஞர், மணமக்கள் மற்றும் குடும்பத்தாரின் முழுமையான ஒத்துழைப்பு தேவை !**

**தோழி பெண், தோழி மாப்பிள்ளை யார் என்பதை முன்னதாக முடிவெடுக்கவும். அவர்கள் நிகழ்ச்சிகள் முடியும் வரை மேடையில் இருக்க வேண்டும்**

**பூஜை துவக்கத்தில் மணமக்கள் தங்கள் தாய், தகப்பனார்(பாதை பூஜை செய்பவர்கள்) உடன் சேர்ந்து அமரவேண்டும்.**

**❖ பெரியவர்களை தேவாரம், திருவாசகம் ஓதி வாழ்த்த ஏற்பாடு செய்யுங்கள் ❖**


